©
தமிழ்நாடு அரசு
2017

பதிவு எண் M-924

# வேலூர் மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

## ஆணையின்படி வெளியிடப்பட்டது

எண் 11] வேலூர், செவ்வாய்க்கிழமை, மே 2, 2017.

சித்திரை 19, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048.

# உள்ளாட்சித்துறை அறிவிக்கை

(ந.க. எண் 140/2017/எச்1)

## பேர்ணாம்பட்டு நகராட்சி

### திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016

### நகர மன்ற தீர்மானம் எண். 1139

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண். 29/1986)-ன் பிரிவு 3, 6 மற்றும் 25-களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம் பிரித்தல், எடுத்துச் செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ல் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து கழிவுகளை கண்ட இடங்களில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம்பிரித்து நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பேர்ணாம்பட்டு நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ன் கீழ் இயற்றப்பட்டது.

நகராட்சியின் வாகனம் மூலம் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த பயன்படுத்துவோர் கட்டணங்கள் பின்வருமாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| வரிசை எண். | பொருள். | காலம். | கட்டணம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | ரூ. பை. |
| | 1. குடியிருப்பு | | |
| அ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.500-க்குள்) | மாதம் ஒன்றிற்கு | 20.00 |
| ஆ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.501-1000-க்குள்) | மாதம் ஒன்றிற்கு | 30.00 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | | ரூ. பை. |
| இ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.1001-2000-க்குள்) | மாதம் ஒன்றிற்கு | 50.00 |
| ஈ. | தனிநபர் குடியிருப்பு (சொத்துவரி ரூ.2001-க்கு மேல்) | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| | **2. நிறுவனம்** | | |
| அ. | தனியார் பள்ளி, கல்லூரி விடுதி தனியார் அலுவலக வளாகம் | மாதம் ஒன்றிற்கு | 200.00 |
| ஆ. | மருத்துவமனை (படுக்கையுடன்) | மாதம் ஒன்றிற்கு | 250.00 |
| இ. | கிளினிக் | மாதம் ஒன்றிற்கு | 200.00 |
| | **3. வணிகம்** | | |
| அ. | டீஸ்டால் / சிற்றுண்டி | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| ஆ. | நடமாடும் உணவகம் | தினமும் | 10.00 |
| இ. | உணவகம் சிறியது | மாதம் ஒன்றிற்கு | 200.00 |
| ஈ. | உணவகம் பெரியது | மாதம் ஒன்றிற்கு | 500.00 |
| உ. | வணிக வளாகம் | மாதம் ஒன்றிற்கு | 500.00 |
| ஊ. | திருமண மண்டபம் சிறியது | நிகழ்வு ஒன்றுக்கு | 500.00 |
| எ. | தையல் கடை | மாதம் ஒன்றிற்கு | 50.00 |
| ஏ. | இருசக்கர வாகன பழுது நீக்கும் கடை | மாதம் ஒன்றிற்கு | 50.00 |
| ஐ. | மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் கடை | மாதம் ஒன்றிற்கு | 50.00 |
| ஒ. | தேங்காய் / பூ / பழம் / காய்கறிகள் வியாபாரம் | மாதம் ஒன்றிற்கு | 50.00 |
| ஓ. | பலசரக்கு / ஸ்டேசனரி / மருந்தகம் | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| ஔ. | ஸ்வீட் / பேக்கரி | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| | **4. மற்றவை** | | |
| அ. | மட்டன் / சிக்கன் / மீன் ஸ்டால் / மாடு | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| ஆ. | சினிமா தியேட்டர் / தங்கும் விடுதி | மாதம் ஒன்றிற்கு | 300.00 |
| இ. | ஜவுளி கடை வியாபாரம் | மாதம் ஒன்றிற்கு | 300.00 |
| ஈ. | தோல் பை விற்பனை, தயார் செய்தல், காலணி விற்பனை | மாதம் ஒன்றிற்கு | 100.00 |
| உ. | மரக்கழிவுகள் | ஒரு லாரி அளவுக்கு | 300.00 |
| ஊ. | தோட்டக்கழிவுகள் | ஒரு லாரி அளவுக்கு | 300.00 |
| எ. | வீட்டுத் தோட்டக்கழிவுகள் | ஒரு லாரி அளவுக்கு | 300.00 |
| ஏ. | கட்டிட கழிவுகள் | ஒரு லாரி அளவுக்கு | 500.00 |

மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு 1920 நகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும் 1999 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15-ன்படி பேர்ணாம்பட்டு நகராட்சியின் சுற்றுச் சூழலுக்கு எதிரானதாக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.

## அட்டவணை IV

## தண்டனைத் தொகை விபரம்.

| வரிசை எண். | தண்டனைத் தொகை விபரம். | கட்டணம். |
|---|---|---|
| (1) | (2) | (3) ரூ. பை. |
| 1. | பொது இடத்தில் குப்பை போடுதல், பிற காலி இடங்களில் குப்பை போடுதல், வண்டிகளிலிருந்து குப்பைகளை எறிதல், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களிலிருந்து குப்பைகளை எறிதல். | 200.00 |
| 2. | குப்பைகளை முறைப்படி பிரித்து கொடுக்காமல் இருத்தல். | |
| | அ. தனி நபர் வீட்டிற்கு | 100.00 |
| | ஆ. அடுக்குமாடி குடியிருப்பு | 200.00 |
| | இ. மொத்த உற்பத்தியாளர் (Bulk Generator) | 1000.00 |
| 3. | கட்டிடக் கழிவுகளை முறைப்படி பிரித்து கொடுக்காதவர்கள் | 1000.00 |
| 4. | தோட்டக் கழிவுகள் மற்றும் மரக்கழிவுகள் முறைப்படி அப்புறப்படுத்தாதவர்கள் | 500.00 |
| 5. | குப்பைகளை குப்பை சேகரிக்கும் பின்னை (Waste Storage Bin) சுற்றி வெளியில் போடுதல் (அல்லது) காலி இடத்தில் போடுதல் | 100.00 |
| 6. | குப்பைகளை எரித்தல் | |
| | அ. தனிநபர் அல்லது குடியிருப்புக்குள் | 50.00 |
| | ஆ. தனிநபர் பொது இடத்தில் | 100.00 |
| | இ. நிறுவனங்கள் | 200.00 |
| 7. | மட்டன், சிக்கன், மீன் (வீடுகள் அல்லாமல்) கழிவுகள் முறைப்படி அப்புறப்படுத்தாதது | 300.00 |
| 8. | குப்பை பின் வைக்காமல் வியாபாரம் செய்வது | 50.00 |
| 9. | வியாபாரி குப்பைகளை முறைப்படி பிரிக்காமல் கொடுப்பது | 50.00 |
| 10. | பொது நிகழ்ச்சி அல்லது பொதுமக்கள் கூடும் நிகழ்வுக்குப் பின் அவ்விடத்தை சுத்தம் செய்யாமல் இருப்பது | 1000.00 |
| 11. | திறந்த வெளியில் மலம், ஜலம் கழித்தல் | 100.00 |

தொடர் குற்றங்களுக்கு கூடுதலாக தினசரி ரூ. 100/- வீதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, நகராட்சியின் ஆணையாளருக்கு நகர்மன்றத்தால் அதிகாரம் வழங்கப்படுகிறது. இச்செயல்பாடுகள் அனைத்தும் 01-04-2017 முதல் அமுலுக்கு வருகிறது.

பேர்ணாம்பட்டு,
2017 ஏப்ரல் 13.

கா. மணி,
*ஆணையாளர்,*
*பேர்ணாம்பட்டு நகராட்சி.*

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் விருத்தாசலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.